# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## **<u>ஆணை நாள் – 08.04.2026</u>**

## <u>முன்னிலை</u>

## திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,
## மாநில தகவல் ஆணையர்

*****

## <u>வழக்கு எண்.SA.12888/C/2023</u>

திரு ந. புகழேந்தி .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / இணை இயக்குநர்,
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
(துறை தலைவர்) அலுவலகம், பனகல் மாளிகை,
சைதாப்பேட்டை, சென்னை - 600 015. .. பொது அதிகார அமைப்பு

<u>பார்வை:</u>

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 18.04.2022 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 25.04.2022 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 05.07.2022 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 14.07.2022 |

*******

## <u>ஆணை</u>

இவ்வழக்கு இன்று (08.04.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மனுதாரரான திரு ந. புகழேந்தி என்பவர் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் இன்றைய விசாரணைக்கு தன்னால் ஆஜராக இயலாது என 08.04.2026 தேதியிட்டு மின்னஞ்சல் வாயிலாக இவ்வாணையத்திற்கு தெரிவித்துள்ளார். அதனை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி மா. சுமதி, ஆராய்ச்சி அலுவலர், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) அலுவலகம், வனத்துறை தலைமையிடம், கிண்டி, சென்னை என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சென்னை, தமிழ்நாடு வனச்சீருடை பணியாளர் தேர்வுக்குழுமம் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், விளம்பர அறிவிப்பு எண்.2/2019 நாள் 30.11.2019-ல் வெளியான வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் தேர்வில் வெற்றி பெற்று பணியில் சேர்ந்து பின்பு அந்த பணியைவிட்டு விலகியவர்கள் எத்தனை பேர் என்பது பற்றிய விவரம், கடந்த

23.10.2021 அன்று வெயிடப்பட்ட அறிவிப்பின்படி கூடுதலாக தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வர்களில் யாருக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்பது பற்றிய விவரம், மேற்படி விளம்பர அறிவிப்பின்படி நடத்தப்பட்ட வனக்காப்பாளர் தேர்வின் மூலம் நிரப்பப்பட்ட வனக்காப்பாளர் பதவிகளில் ஏதேனும் பணியிடங்கள் தற்போது காலியாக உள்ளதா என்பது பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 3 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண்.ஆர்டிஐ/24707/2023 நாள் 25.10.2024 தேதியிட்டு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரின் வாயிலாக ஏற்கெனவே மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதி, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.12888/C/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / இணை இயக்குநர்,
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
(துறை தலைவர்) அலுவலகம்,
பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

**<u>வழக்கு எண்.SA.12888/C/2023</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு ந. புகழேந்தி, த/பெ. ஆ. நல்லதம்பி,
எண்.6, மூன்றாவது குறுக்குத்தெரு,
TNCSC நகர், கோண்டூர், கடலூர் - 607 006.

Copy to: File
SNPS / 09.04.2026